athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்.

TAMIL NADU UNIFORMED SERVICES RECRUITMENT BOARD

பழைய காவல் ஆணையாளர் அலுவலக வளாகம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8

Old Commissioner Of Police Office Campus, Pantheon Road, Egmore, Chennai-8.

Web site : www.tnusrbonline.org

தகவல் சிற்றேடு

இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு 2019

Information Brochure

Common Recruitment for the post of Gr.II Police Constable, Gr.II Jail Warder and Fireman 2019

அறிவுரைகள்
INSTRUCTIONS

1. (i) தமிழ்நாடு காவல் துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளில் காலியாகவுள்ள 8826 காலிப்பணியிடங்களை பொதுத் தேர்வு மூலம் நிரப்பிடுவதற்கான விளம்பரம் 06.03.2019 அன்று நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளது.

(ii) இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இத்தகவல் சிற்றேட்டில் உள்ள விதிமுறைகள் மற்றும் விளக்கக் குறிப்புகளை படித்த பின்னர் இணையவழி விண்ணப்பத்தில் கோரியுள்ள விபரங்களை சரியாக நிரப்பி, அத்துடன் தேவையான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(iii) **காலிப்பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை**: **8826.**

துறை வாரியான காலிப்பணியிடங்கள் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

துறை	பதவி	ஆண்கள்	பெண்கள்/ திருநங்கைகள்	மொத்தம்
காவல் துறை	இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட/ மாநகர ஆயுதப்படை)	--	2465 (பெண்கள்/ திருநங்கைகள்	2465
	இரண்டாம் நிலை காவலர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை	5962	--	5962
சிறைத்துறை	இரண்டாம் நிலை சிறைக் காவலர்	186	22 (பெண்கள்)	208
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை	தீயணைப்பாளர்	191	--	191

இது தவிர 62 பின்னடைவு காலிப்பணியிடங்கள் [ஆயுதப்படை-7, சிறைத்துறை-12 மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை -43 பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமியர்) வகுப்பினருக்கான பின்னடைவு காலிப்பணியிடங்கள்].

3. ஊதிய விகிதம் : ரூ.18200 - 52900

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

4.கல்வித் தகுதி :

(i) **10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

(ii) விண்ணப்பதாரர் 10-ம் வகுப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாக படித்திருக்க வேண்டும். இல்லையெனில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை தமிழ் தேர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து இரண்டாண்டுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

(iii) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாமல் அதற்கு மேற்பட்ட கல்வித்தகுதியினைப் பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

5. அனைத்துப் பதவிகளுக்கும் விண்ணப்பிப்போருக்கு இருக்க வேண்டிய வயது வரம்பு:

i.	பொதுப் பிரிவினர்	01.07.2019 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1995-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்).
ii.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்	01.07.2019 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (01.07.1993-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்),
iii.	ஆதிதிராவிடர் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பழங்குடியினர்	01.07.2019 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1990-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்).
iv.	ஆதரவற்ற விதவைகள்	01.07.2019 அன்று 18 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (01.07.1984-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்).
v.	முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள்	01.07.2019 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1974 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்).

குறிப்பு:

(a) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டுகள் நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

(b) முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஏதேனும் அரசுப் பணியில் பணியமர்த்தப்பட்டிருந்தால் இத்தேர்வில், அவர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சலுகைகளைக் கோர இயலாது.

(c) இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெற இருப்பின், அவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பம் செய்யலாம். இவ்விதம் விண்ணப்பம் செய்பவர்கள் தாங்கள் பணிபுரியும் அலுவலக அதிகாரியிடத்தில் உரிய படிவத்தில் சான்றிதழ் பெற்று சுயஉறுதிமொழி படிவத்தினை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

6. வகுப்புவாரி ஒதுக்கீடுகள்:-

i) வகுப்புவாரி இடஒதுக்கீடு கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

பொதுப் பிரிவினர்	31%
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	26.5%
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)	3.5%
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்	20%
ஆதிதிராவிட வகுப்பினர்	15%
ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர்	3%
பழங்குடியின வகுப்பினர்	1%

ii) ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான 3% இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டின் கீழும் தேர்வு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் அப்பதவியிடங்கள் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினரில்லாத பிற ஆதிதிராவிடர் வகுப்பினரைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

7. சிறப்பு ஒதுக்கீடுகள் :

I) **10% விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு:**

காவல், சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளுக்கான மொத்த காலிப்பணியிடங்களில் 10% விளையாட்டிற்கான ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும். 10% விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் பொது விண்ணப்பதாரர்களைப் போலவே அனைத்துத் தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட 15 விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றில் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் தேதியான 06.03.2019-க்கு முன்னர் 5 ஆண்டுகளுக்குள் அதாவது 06.03.2014-லிருந்து 06.03.2019க்குள் கலந்துகொண்டு பெற்ற விளையாட்டுப் படிவம்-I / படிவம்-II / படிவம்-III-ஐ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அல்லது தமிழ்நாடு ஒலிம்பிக் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கழகங்கள் அல்லது இந்திய தேசிய ஒலிம்பிக் ஆணையம் மூலம் கலந்து கொண்டு பெற்றிருத்தல் வேண்டும்.

விளையாட்டுப் படிவத்தின் பெயர்	விவரம்	சான்றிதழ் வழங்கும் அலுவலர்
படிவம் I	இந்திய நாட்டின் சார்பாக பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொண்டவர்.	செயலாளர், தேசிய விளையாட்டு கூட்டமைப்பு
படிவம் II	தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பாக கலந்து கொண்டவர்.	செயலாளர், தேசிய விளையாட்டு கூட்டமைப்பு அல்லது செயலாளர், மாநில விளையாட்டு அமைப்பு
படிவம் III	பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் தமிழக பல்கலைக்கழகம் சார்பாக கலந்து கொண்டவர்.	கல்லூரி முதல்வர், இயக்குநர் அல்லது பல்கலைக் கழகத்தின் விளையாட்டு பொறுப்பு அதிகாரி

விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களது விளையாட்டு படிவம் I அல்லது II அல்லது III -இல் விளையாட்டில் கலந்து கொண்ட வருடம் மட்டும் குறிக்கப்பட்டு கலந்துகொண்ட நாட்கள் அதாவது விளையாட்டு தொடங்கிய நாள், விளையாட்டு முடிவடைந்த நாள் [(date from ------- to ------)] விவரம் குறிக்கப்படாமலிருந்தால், விளையாட்டுப் படிவம் வழங்கிய அதிகாரியிடமிருந்து தனியாக விளையாட்டில் கலந்து கொண்ட நாட்கள் அதாவது தொடங்கிய நாள் மற்றும் முடிவடைந்த நாள் [(i.e. date from ------- to ------)]பற்றிய விவரம் குறித்த சான்றிதழை தனியாகப் பெற்று விளையாட்டில் கலந்து கொண்ட நாள் விவரத்தை உள்ளீடு செய்வதுடன், அச்சான்றிதழையும் ஒரே pdf-ல் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்:

1. கூடைப்பந்து, 2. கால்பந்து, 3. ஆக்கி, 4. கையுந்துப்பந்து, 5. கைப்பந்து, 6. கபடி, 7. மல்யுத்தம், 8. குத்துச் சண்டை, 9. ஜிம்னாஸ்டிக்ஸ், 10. ஜூடோ, 11. பளு தூக்குதல், 12. நீச்சல் போட்டி, 13. தடகளப் போட்டிகள், 14. குதிரையேற்றம், 15. துப்பாக்கி சுடுதல்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

குறிப்பு:

(i) விளம்பரத் தேதிக்கு முன்னர் ஐந்து வருடங்களுக்குள் (அதாவது 06.03.2014-இலிருந்து 06.03.2019 வரை) அங்கீகரிக்கப்பட்ட 15 விளையாட்டுகளில் கலந்துகொண்டு பெற்றதற்கான விளையாட்டுப் படிவம்-I / படிவம்-II / படிவம்-IIIஐ விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யாதிருந்தால் அவர் விளையாட்டுக்கான 10% ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார். அவர் பொது விண்ணப்பதாரராகவே பாவிக்கப்படுவார்.

(ii) விளையாட்டு படிவம்-I /படிவம்-II / படிவம்-IIIஐ இணைய வழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யாமல் பின்னர் சமர்பித்தால், அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விளையாட்டுக்கான படிவம்-I /படிவம்-II / படிவம்-III ஆகியன போலி விளையாட்டு படிவச் சான்றிதழ் என்று கண்டறியப்பட்டால், அவர் இத்தேர்வில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

(iv) விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு, உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல் ஆகியவற்றில் கலந்துகொள்ள வேண்டும்.

(v) விளையாட்டுக்கான 10% ஒதுக்கீட்டின் கீழ் நிரப்ப தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்த காலிப்பணியிடங்கள் பொதுப் பிரிவில் (General Pool) உள்ளவர்கள் மூலம், வகுப்புவாரி ஒதுக்கீட்டைப் பின்பற்றி நிரப்பப்படும்.

(vi) விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் தேர்ச்சி பெறுபவர்கள் ஒரே வகுப்பைச் சார்ந்தவராகவும் மற்றும் ஒரே தகுதி மதிப்பெண் பெற்றிருந்தால் பிறந்த தேதியின் அடிப்படையில் வயதில் மூத்தவருக்கு தற்காலிகப்பட்டியல் தெரிவின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

(vii) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், எழுத்துத் தேர்வு, உடற்திறன் போட்டி மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் (Special Marks) ஆகியவற்றில் பெறும் மொத்த மதிப்பெண்கள் மற்றும் பதவி முன்னுரிமையின் அடிப்படையில், வகுப்புவாரி ஒதுக்கீட்டின்படி தேர்வு செய்யப்படுவார்கள்.

(viii) விளையாட்டிற்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்து, தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வு செய்யப்பட்ட பிறகு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப்படி முன்னுரிமை பெறுவர்.

a. பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
b. பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.
c. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
d. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.
e. பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
f. பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.

II) 5% இடஒதுக்கீடு

முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள்:

i) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் அவர்களது இணையவழி விண்ணப்பத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்றிதழை (Discharge certificate) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ii) இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் அவர்களது இணையவழி விண்ணப்பத்தில் சுயஉறுதிமொழியுடன் கூடிய தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) உரிய படிவத்தில் பெற்ற சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழை பதிவேற்றம் செய்யத் தவறினால் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

iii) முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர், இராணுவ / மத்திய துணை இராணுவப் படையிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்றிதழை (Discharge certificate) பதிவேற்றம் செய்யத்தவறினால் அவர்கள் 5% இடஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

iv) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டுகள் நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

v) முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஏதேனும் அரசுப் பணியில் பணியமர்த்தப்பட்டிருந்தால் இத்தேர்வில், அவர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சலுகையினைக் கோர இயலாது. (மாதிரிச் சான்றிதழ் பிற்சேர்க்கை-6ல் உள்ளது).

III) 3% ஆதரவற்ற விதவைகளுக்கான (Destitute Widow) ஒதுக்கீடு:

i) மாவட்ட/மாநகர ஆயுதப்படைக்கான பெண்கள், திருநங்கைகள் மற்றும் சிறைத்துறை பெண்களுக்குரிய காலிப்பணியிடங்களில் 3% ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும்.

ii) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழை வருவாய் கோட்ட அலுவலர் (RDO)/சார் ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்று இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழை பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் ஆதரவற்ற விதவைக்கான ஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது. (ஆதரவற்ற விதவைக்கான மாதிரிச் சான்றிதழ் பிற்சேர்க்கை-4ல் உள்ளது).

iv) சிறப்பு ஒதுக்கீட்டிற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி அதே வகுப்பைச் சேர்ந்த பிற பெண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்

v) ஆதரவற்ற விதவைகளுக்கான பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அப்பணியிடங்கள் அந்தந்த வகுப்பிற்குரிய பொது விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

8. 20% பத்தாம் வகுப்பில் தமிழ் பயிற்று மொழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை:

(i) இத்தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்கள், இத்தேர்வுக்கான கல்வித்தகுதியான 10-ம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு இறுதி தற்காலிகத் தெரிவின் போது (Final Provisional Selection) வகுப்பு வாரியாக 20% முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) விண்ணப்பதாரரின் 10ம் வகுப்பு பள்ளி மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) / பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் பயிற்று மொழி (Medium of Instruction) தமிழ் என்று இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதிருந்தால், விண்ணப்பதாரர் 10-ம் வகுப்பு பயின்ற கல்வி நிலையத்திலிருந்து தமிழ் பயிற்று மொழியில் படித்துள்ளார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று இணையவழி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

(iii) விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியினை தனித்தேர்வர் (Private) வழியில் பயின்று தேர்ச்சி பெற்றிருந்தால் அவர் தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழை மாநில பள்ளித் தேர்வுகள் குழுமம் (இடைநிலை), அரசு தேர்வுகள் துறை, தமிழ்நாடு, சென்னை-6 (State Board of School Examinations (Secondary), Department of Government of Examinations, Tamil Nadu, Chennai-6), அலுவலகத்திலிருந்து பெற்று பதிவேற்றம் செய்திடல் வேண்டும். இவ்வாறு உரிய சான்றிதழ் பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர்கள் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

(iv) விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பில் தமிழ்வழியில் பயின்றதற்கான சான்றிதழை இணைக்காமல் மேல்நிலை வகுப்பினை (HSC) அல்லது பட்டப் படிப்பினை (Degree) தமிழ்வழியில் கற்றதற்கான சான்றிதழைச் சமர்ப்பித்தால் அச்சான்றிதழ் 20% முன்னுரிமை அடிப்படையின் கீழ் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. திருநங்கைகள் (Transgenders):

a) திருநங்கைகள், ஆண் அல்லது பெண் அல்லது மூன்றாம்பாலினம் என ஏதேனும் ஒன்றினை தனது பாலினமாக தேர்வு செய்துகொள்ளலாம். திருநங்கைகள் மூன்றாம்பாலினத்தவரென விண்ணப்பம் செய்தால் தங்களது விண்ணப்பத்துடன், தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்திலிருந்து பெறப்பட்ட அடையாள அட்டையின் நகலினை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

b) திருநங்கைகள், ஆண் பாலினத்தை தேர்வு செய்தால் ஆண்களுக்கான உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளிலும், பெண் அல்லது மூன்றாம் பாலினத்தை தேர்வு செய்தால் பெண்களுக்கான உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டும்,

c) திருநங்கைகள், மூன்றாம்பாலினத்தவரென விண்ணப்பித்தால் இவர்கள் பாலினத்தில் பெண் விண்ணப்பதாரர்களாகப் பாவிக்கப்படுவார்கள்.

d) திருநங்கைகள், தனது சாதிக்குரிய சாதிச் சான்றிதழை சமர்ப்பித்தால், அவர்கள் பிற விண்ணப்பதாரர்களைப் போன்று அவரவர் வகுப்புவாரி ஒதுக்கீடு பெறலாம்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

e) திருநங்கைகள், சாதிச் சான்றிதழ் சமர்ப்பிக்காவிடில் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகப் பாவிக்கப்படுவர்.

10. பதவி விருப்ப முன்னுரிமை:

(a) i	பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்கள் ஆயுதப்படை (AR) காவலர் பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம்.
ii.	ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (TSP) பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம்.
iii.	ஆண், மற்றும் பெண் விண்ணப்பதாரர்கள் சிறைக்காவலர் (JW) பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம்.
iv.	ஆண் விண்ணப்பதாரர்கள் தீயணைப்பாளர் (Firemen) பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம்.
v.	திருநங்கை விண்ணப்பதாரர்கள் சிறைக்காவலர் (JW) பதவிக்கு முன்னுரிமை அளிக்க தகுதியற்றவர்கள்.
vi.	பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்கள் இரண்டாம் நிலைக் காவலர் (TSP) பதவிக்கு முன்னுரிமை அளிக்க தகுதியற்றவர்கள்.

b) i) விண்ணப்பதாரர் மேலே வரிசை எண்.10 (a)-வில் கூறப்பட்டுள்ளபடி, இணைய வழி விண்ணப்பத்தில் தொகுதி-8ல் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பதவிகளுள் ஒரு பதவியையோ ஒன்றுக்கு மேற்பட்ட பதவியையோ தேர்வு செய்யலாம். அவ்வாறு ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை (AR/TSP / Jail Warder / Fireman) தேர்வு செய்யும் பொழுது தனது விண்ணப்பத்தில், தான் நியமிக்கப்பட விரும்பும் பதவிகளை முன்னுரிமை வரிசைப்படி தெரிவு செய்ய வேண்டும்.

ii) இறுதி தற்காலிகத் தெரிவு பட்டியல் தயாரிக்கும் வேளையில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படத் தகுதி வாய்ந்தவராகக் காணப்பட்டால், அவரது விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் பதவி முன்னுரிமை வரிசையைக் கருத்தில் கொள்ளப்படும்.

iii) விண்ணப்பத்தில் தேர்வு செய்திருக்கும் பதவி முன்னுரிமையே இறுதியானது. பின்னர் கோரப்படும் பதவி முன்னுரிமை பற்றிய எந்த முறையீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iv) விண்ணப்பதாரர்கள் பதவி முன்னுரிமையில் ஒரு பதவியை மட்டும் தேர்வு செய்துவிட்டு, மற்ற பதவிகளுக்கு முன்னுரிமை குறிப்பிடப்படவில்லையெனில் அவர்கள் மற்ற பதவிகளுக்குத் தேர்வு செய்யும் வாய்ப்பை இழக்க நேரிடுவார்கள்.

c) இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு தாங்கள் விரும்பும் பதவிக்கான (AR/TSP/ Jail Warder/ Fireman) விருப்பத்தினை முன்னுரிமைப்படி வரிசைகிரமமாக தவறாமல் நிரப்ப வேண்டும். விண்ணப்பதாரர், அவர் விரும்பும் பதவிக்கு கொடுத்துள்ள முன்னுரிமை மற்றும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்.

d) விண்ணப்பதாரர்கள் பிற பதவிக்கான மதிப்பெண் பெற்றிருந்தாலும் முன்னுரிமை தெரிவித்த முதல் பதவிக்கே தெரிவு செய்யப்படுவார்கள். பின்னர் கோரும் எந்தவிதமான பதவி மாற்ற வேண்டுதல், எக்காரணத்தை முன்னிட்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

11. தேர்வு முறைகள் : இத்தேர்வானது கீழ்க்காணும் தேர்வு நிலைகளின்படி நடத்தப்படும்.

வ. எண்.	தேர்வு நிலைகள்	மதிப்பெண்கள்	விவரம்
1.	எழுத்துத் தேர்வு	80 மதிப்பெண்கள்	எழுத்துத் தேர்வில் பொது அறிவு மற்றும் உளவியல் தொடர்பான கேள்விகள் கேட்கப்படும். எழுத்துத் தேர்வு முழுமையான விவரம் வரிசை எண்.12-ல் அளிக்கப்பட்டுள்ளன.
2.	உடற்கூறு அளத்தல்	இல்லை	உடற்கூறு அளத்தல் தகுதித் தேர்வேயாகும். முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ மற்றும் துணை இராணுவப் படையினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு இல்லை. உடற்கூறு அளத்தல் முழுமையான விவரம் வரிசை எண்.14ல் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளன.
3.	உடல்தகுதித் தேர்வு	இல்லை	உடல்தகுதித் தேர்வு தகுதித் தேர்வேயாகும். உடல்தகுதி முழுமையான விவரம் வரிசை எண்.15ல் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளன.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

4.	உடற்திறன் போட்டிகள்	15 மதிப்பெண்கள்	உடற்திறன் போட்டிகள் விவரம் வரிசை எண்.16ல் முழுமையான விவரம் அளிக்கப்பட்டுள்ளன.
5.	சிறப்பு மதிப்பெண்கள்	5 மதிப்பெண்கள்	தேசிய மாணவர்படை சான்றிதழ் (NCC) - 2 மதிப்பெண்கள், நாட்டு நலப்பணித் திட்டம் சான்றிதழ் (NSS) - 1 மதிப்பெண், விளையாட்டுச் சான்றிதழ் (Sports/Games) - 2 மதிப்பெண்கள், ஒவ்வொரு சான்றிதழுக்கும் மதிப்பெண் வழங்கும் விவரம் வரிசை எண் 17-ல் அளிக்கப்பட்டுள்ளது.
மொத்தம்		100 மதிப்பெண்கள்	

12. எழுத்துத் தேர்வு

a) பகுதி-அ பொது அறிவு - 50 மதிப்பெண்கள் (கொள்குறி வகை)
பகுதி-ஆ உளவியல் - 30 மதிப்பெண்கள் (கொள்குறி வகை)

b) எழுத்துத் தேர்வுக்கான நேரம் 1 மணி 20 நிமிடங்கள்.

c) எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 28 மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டும்.
எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குரிய, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு இக்குழும (www.tnusrbonline.org) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் தனது தேர்வுக்கூட நுழைவுச்சீட்டை மேலே சொல்லப்பட்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

13. உடல்கூறு அளத்தல். உடல்தகுதித் தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தலுக்கு அழைத்தல்:

(i) விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வில் குறைந்த பட்சம் 28 மதிப்பெண்கள் பெற்றாலும், விண்ணப்பதாரர்களின் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பு வாரி விகிதாச்சாரப்படி 1:5 விண்ணப்பதாரர்கள் மட்டும் அடுத்தகட்ட தேர்வான, உடல்கூறு அளத்தல். உடல்தகுதித் தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் ஆகியனவற்றிற்கு அழைக்கப்படுவார்கள். இத்தேர்வுகளுக்கு தகுதிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு இக்குழும இணையதளம் www.tnusrbonline.org யில் பதிவேற்றம் செய்யப்படும். தேர்வுக்கூட நுழைவுச்சீட்டை இவ்வினையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(ii) உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் பெற்ற பெண் விண்ணப்பதாரர்கள் மகப்பேறு காலத்திலிருந்தால், அவர்கள் மகப்பேறு காலத்தில் இருப்பதாகவும் மற்றும் உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளான ஓட்டம் மற்றும் நீளம் தாண்டுதல் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றவர் என்பதற்கான சான்றிதழை ஏதேனும் ஓர் அரசு மருத்துவ அதிகாரியிடம் பெற்று சமர்ப்பித்திடல் வேண்டும்.

14. உடற்கூறு அளத்தல் (Physical Measurement Test)

உடற்கூறு அளத்தலில் ஆண் விண்ணப்பதாரர்களுக்கு உயரம் மற்றும் மார்பளவு அளத்தல் நடைபெறும். பெண் விண்ணப்பதாரர்கள் மற்றும் திருநங்கைகளுக்கு உயரம் அளத்தல் மட்டுமே நடைபெறும். இத்தேர்வுக்கான உடற்கூறு அளவுகள் பின்வருமாறு :-

(i) **ஆண்கள் :-**

உயரம் :-	
(i) பொதுப் பிரிவினர் (OC), பிற்படுத்தப்பட்டோர் (BC), பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமியர்) [BC(M)] மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் (MBC/DNC)	குறைந்த அளவு 170 செ.மீ.
(ii) ஆதிதிராவிடர் (SC) / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) [SC(A)] / பழங்குடியினர் (ST).	குறைந்த அளவு 167 செ.மீ.
மார்பளவு :-	
(i) சாதாரண நிலையில்	குறைந்த அளவு 81 செ.மீ.
(ii) மூச்சை உள் வாங்கிய நிலையில் விரிவாக்கம்	குறைந்த அளவு விரிவாக்கம் 5 செ.மீ. (மூச்சை உள் வாங்கிய விரிவாக்க நிலையில் குறைந்த அளவு 86 செ.மீ.)

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

(ii) **பெண்கள் மற்றும் திருநங்கைகள்:**

உயரம் :-	
(i) பொதுப் பிரிவினர் (OC), பிற்படுத்தப்பட்டோர் (BC), பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) [BC(M)] மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் (MBC/DNC)	குறைந்த அளவு 159 செ.மீ.
(ii) ஆதிதிராவிடர் (SC), ஆதிதிராவிடர் (அருந்ததியர்) [SC(A)] மற்றும் பழங்குடியினர் (ST).	குறைந்த அளவு 157 செ.மீ.

குறிப்பு:

(i) உடற்கூறு அளத்தலில் முழு எண்ணுக்கு அருகிலுள்ள 0.2 செ.மீ அளவானது அதற்கு அருகிலுள்ள முழு எண்ணாகவும், அதேபோன்று 0.5 செ.மீக்கு முன்னும் பின்னும் உள்ள 0.2 செ.மீ அளவானது 0.5 செ.மீ அளவாக எடுத்துக்கொள்ளப்படும்.

(ii) ஆண், பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்கள் உடற்கூறு அளத்தலில் மனக்குறை இருந்தால் துணைக்குழு தலைவர் (Sub-Committee Chairman) அவர்களிடம் மேல் முறையீடு செய்யலாம்.

(iii) உடற்கூறு அளத்தலில் தகுதி பெறுபவர்கள், அடுத்த கட்டத் தேர்வான உடல்தகுதித் தேர்வுக்கு (Endurance Test) அனுப்பிவைக்கப்படுவார்கள். உடற்கூறு அளத்தலில் தகுதி இழப்பவர்கள், தகுதி இழப்பு செய்யப்பட்டு போட்டித் தேர்விலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

(iii) முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள்:

இவர்களுக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு (Physical Measurement Test) கிடையாது.

15. உடல்தகுதித் தேர்வு (Endurance Test)

i)	ஆண்கள்	:	1500 மீட்டர் தூரத்தை 7 நிமிடங்களில் ஓடி முடிக்க வேண்டும்.
ii)	பெண்கள் மற்றும் திருநங்கைகள்	:	400 மீட்டர் தூரத்தை 2 நிமிடம் 30 வினாடிகளில் ஓடி முடிக்க வேண்டும்.
iii)	முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள்	:	1500 மீட்டர் தூரத்தை 8 நிமிடங்களில் ஓடி முடிக்க வேண்டும்.

உடல்தகுதித் தேர்வில் தேர்வு பெறுபவர்கள் மட்டுமே, அடுத்த கட்டத் தேர்வான உடல்திறன் (Physical Efficiency Test) போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள். உடல்தகுதித் தேர்வில் தகுதி இழப்பவர்கள், தகுதி இழப்பு செய்யப்பட்டு போட்டித் தேர்விலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

16. உடல்திறன் போட்டி (Physical Efficiency Test)

அ) **ஆண்கள்:**

வ. எண்	**நிகழ்வுகள்**		**ஒரு நட்சத்திரம் (2 மதிப்பெண்கள்)**	**இரு நட்சத்திரங்கள் (5 மதிப்பெண்கள்)**
1.	கயிறு ஏறுதல்		5.0 மீட்டர்	6.0 மீட்டர்
2.	நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல்	நீளம் தாண்டுதல்	3.80 மீட்டர்	4.50 மீட்டர்
		உயரம் தாண்டுதல்	1.20 மீட்டர்	1.40 மீட்டர்
3.	ஓட்டம் 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர்	100 மீட்டர்	15.00 வினாடிகள்	13.50 வினாடிகள்
		400 மீட்டர்	80.00 வினாடிகள்	70.00 வினாடிகள்

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

i) ஆண் விண்ணப்பதாரர்கள் கயிறு ஏறுதல் நிகழ்வில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும். கயிறில் தொடவேண்டிய இலக்கினை முகவாய்கட்டை கொண்டு (Chin) தொட வேண்டும். கைகளை மட்டுமே உபயோகித்துக் கயிறு ஏற வேண்டும். கயிறு ஏறும் போது கால்களை உபயோகப்படுத்தினால் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள். கயிறு ஏறுதலில் ஒரு நட்சத்திர திறன் பெறுபவர் மட்டுமே அடுத்தகட்ட நிகழ்வான உயரம்/நீளம் தாண்டுதலுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

ii) நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல் நிகழ்வில் விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எந்த அளவு அதிகமோ அது தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

iii) கயிறு ஏறுதல், 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும்.

ஆ) பெண்கள் மற்றும் திருநங்கைகள்:

வ எண்	நிகழ்வுகள்		ஒரு நட்சத்திரம் (2 மதிப்பெண்கள்)	இரு நட்சத்திரங்கள் (5 மதிப்பெண்கள்)
1	நீளம் தாண்டுதல்		3.0 மீட்டர்	3.75 மீட்டர்
2	குண்டு எறிதல் (அல்லது) கிரிக்கெட் பந்து எறிதல்	குண்டு எறிதல் (4 kg)	4.25 மீட்டர்	5.50 மீட்டர்
		கிரிக்கெட் பந்து எறிதல்	17 மீட்டர்	24 மீட்டர்
3	ஓட்டம் 100 மீட்டர் (அல்லது) 200 மீட்டர்	100 மீட்டர்	17.50 வினாடிகள்	15.50 வினாடிகள்
		200 மீட்டர்	38.00 வினாடிகள்	33.00 வினாடிகள்

i) நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் / கிரிக்கெட் பந்து எறிதல் நிகழ்வில் பெண் / திருநங்கை விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எந்த அளவு அதிகமோ அது தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ii) 100 மீட்டர் (அ) 200 மீட்டர் ஓட்டம் நிகழ்வில் ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும்.

இ) <u>முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் :</u>

வ. எண்	நிகழ்வுகள்		ஒரு நட்சத்திரம் (2 மதிப்பெண்கள்)	இரு நட்சத்திரங்கள் (5 மதிப்பெண்கள்)
1	குண்டு எறிதல் (7.26 kg)		5.0 மீட்டர்	6.0 மீட்டர்
2	நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல்	நீளம் தாண்டுதல்	3.25 மீட்டர்	4.50 மீட்டர்
		உயரம் தாண்டுதல்	0.90 மீட்டர்	1.40 மீட்டர்
3	ஓட்டம் 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர்	100 மீட்டர்	17.00 வினாடிகள்	13.50 வினாடிகள்
		400 மீட்டர்	85.00 வினாடிகள்	70.00 வினாடிகள்

i) முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப்படை வீரர்கள் மூன்று நிகழ்வுகளிலும் கண்டிப்பாக பங்கேற்க வேண்டும்.

ii) குண்டு எறிதல், நீளம் தாண்டுதல் அல்லது உயரம் தாண்டுதல் நிகழ்வுகளில் விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எந்த அளவு அதிகமோ அது தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

iii) 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்ட நிகழ்வில் ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

முக்கியக் குறிப்பு:

i) ஒவ்வொரு நிகழ்விலும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் ஒரு நட்சத்திர திறன் பெற வேண்டும். தவறும் பட்சத்தில் போட்டியில் இருந்து தகுதி இழப்பர்.

ii) விண்ணப்பதாரர்கள் மூன்று நிகழ்வுகளிலும் குறைந்த பட்சம் 3 நட்சத்திரங்கள் (6 மதிப்பெண்கள்) அல்லது அதிகபட்சமாக 6 நட்சத்திரங்கள் (15 மதிப்பெண்கள்) பெறலாம்.

iii) மூன்று நிகழ்வுகளில் ஒவ்வொரு நிகழ்விலும் குறைந்தபட்சம் ஒரு நட்சத்திரம் பெறுபவர்கள் மட்டுமே அடுத்த நிலைக்குச் செல்ல முடியும்.

iv) மேலே சொல்லப்பட்ட மூன்று நிகழ்வுகளில் ஏதேனும் ஒரு நிகழ்வில் 1 நட்சத்திரம் பெறவில்லை என்றால் விண்ணப்பதாரர் தகுதி இழப்பு அடைவார்.

v) மேலே சொல்லப்பட்ட உடற்திறன் போட்டிகளில் கலந்து கொள்ளும் எந்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் விதிமுறைகளில் யாதொரு தளர்வும் /சலுகையும் வழங்கப்படமாட்டாது.

17. அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் (Original Certificate Verification)

அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்த சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்கள் மட்டுமே சரிபார்ப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்படும். இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யாமல் ஏதேனும் புதிய சான்றிதழ்கள்/நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அவை கட்டாயமாக சரிபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பதாரர்கள் கீழ்காணும் சான்றிதழ்களை அசல் சான்றிதழ் சரிபார்த்தலின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(i) வயதினை நிருபிக்க சான்றிதழ்

(ii) கல்வித் தகுதியினை நிருபிக்க சான்றிதழ்,

(iii) சாதிச் சான்றிதழ்

(iv) விளையாட்டு வீரராக இருப்பின் விளையாட்டுபடிவம் I அல்லது II அல்லது III.

(v) திருநங்கை எனில், அரவாணிகள் (திருநங்கைகள்) நலவாரியத்திடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை

(vi) முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் பணிவிடுப்பு சான்றிதழ் (Discharge certificate)

(vii) இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் அவர்களது சுயஉறுதிமொழியுடன் கூடிய தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) உரிய படிவத்தில் ஓய்வு பெறும் தேதி குறிப்பிட்ட சான்றிதழ்.

(viii) ஆதரவற்ற விதவையெனில் அதற்கான சான்றிதழ்

(ix) தேசிய மாணவர் படை (NCC). நாட்டு நலப் பணி திட்டம் (NSS) மற்றும் பிற விளையாட்டுச் சான்றிதழ்கள் (Sports / Games).

(x) பத்தாம் வகுப்பு கல்வித் தகுதியினை தமிழ்ப்பயிற்று மொழியில் பயின்றிருந்தால் அதற்கான தமிழ்பயிற்று மொழி குறிப்பிடப்பட்ட பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் (10^{th} mark sheet with mentioning of medium of instruction as Tamil) / பத்தாம் வகுப்பு பள்ளி மாற்றுச் சான்றிதழை (10^{th} Transfer Certificate with mentioning of medium of instruction as Tamil) பதிவேற்றம் செய்திட வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழ் இல்லாமலிருந்தால் விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு பயின்ற பள்ளி தலைமையாசிரியரிடமிருந்து பத்தாம் வகுப்பில் தமிழ் பயிற்று மொழியில் பயின்றுள்ளார் என்பதற்கான உரிய படிவத்தில் பெறப்பட்ட சான்றிதழ்.

(xi) பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியினை தனித்தேர்வர் (Private) வழியில் பயின்று தேர்ச்சி பெற்றிருந்தால் அவர் தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழை மாநில பள்ளித் தேர்வுகள் குழுமம் (இடைநிலை), அரசு தேர்வுகள் துறை, தமிழ்நாடு, சென்னை-6 (State Board of School Examinations (Secondary), Department of Government of Examinations, Tamil Nadu, Chennai-6), அலுவலகத்திலிருந்து பெற்ற சான்றிதழ்.

(xii) விண்ணப்பதாரர் தனது பெயரை பத்தாம் வகுப்பு கல்வித் தகுதிக்குப் பின்னர் மாற்றம் செய்து அவ்விவரத்தினை அரசிதழில் (Government Gazette) வெளியிட்டிருந்தால் அரசிதழின் முதல் பக்கம் மற்றும் பெயர் மாற்றம் செய்த விவரம் வெளியிடப்பட்ட பக்கத்தின் நகல்கள்.

(xiii) வயது மற்றும் கல்வி ஆகியவற்றில் தகுதிபெறாதவர்கள் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தலின்போது தகுதி இழப்பர்.

18. சிறப்பு மதிப்பெண்கள் (Special marks for NCC, NSS and Sports/Games)

உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் NCC, NSS மற்றும் Sports/Games ஆகியவற்றில் ஏதேனும் சான்றிதழ் பெற்றிருப்பின் அவர்களுக்குச் சிறப்பு மதிப்பெண்கள், உயர்அளவாக 5 மதிப்பெண்கள் (NCC- 2 marks, NSS -1 mark and Sports/Games - 2 marks) வழங்கப்படும். (விவரங்கள் கீழே

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

கொடுக்கப்பட்டுள்ளது). இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யப்படும் சான்றிதழ்களுக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

<u>சிறப்பு மதிப்பெண்கள்:</u> நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை மற்றும் விளையாட்டுகள்

தேசிய மாணவர் படை (NCC) (உயர் அளவு மதிப்பெண்கள் - 2)	(i)	A சான்றிதழ் - **½ மதிப்பெண்**
	(ii)	"B" சான்றிதழ் - **1மதிப்பெண்**
	(iii)	"C" சான்றிதழ் / சார்பு அலுவலர் / அகில இந்திய அளவில் சிறந்த மாணவர் - **2 மதிப்பெண்கள்**.
நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) (உயர் அளவு மதிப்பெண்- 1)	(i)	திட்டசெயல் தொண்டர்கள் - **½ மதிப்பெண்**. சான்றிதழ் Vice Chancellor/ Head of the educational institution / CEO / Programme Coordinator இவர்களால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
	(ii)	மாநில இளைஞர் விருது / தேசிய இளைஞர் விருது / கீழக்காணும் மாநிலங்களுக்கிடையேயான (தேசிய) (அ) பன்னாட்டு நிகழ்ச்சிகளில் பங்குகொண்டமைக்கு - அ) குடியரசு தின அணி வகுப்பு ஆ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம். இ) வீரதீர நிகழ்வுகள் ஈ) கோடை கால/குளிர்கால முகாம்கள் உ) மாநிலங்களுக்கிடையேயான இளைஞர்களுக்கான பரிமாற்ற மற்றும் மாநிலங்களில் தங்கும் நிகழ்வுகள் ஊ) தேசிய இளைஞர் விழா **= 1 மதிப்பெண்** வழங்கப்படும். மேற்கண்ட சான்றிதழ்கள் Ministry of Youth Affairs and Sports, Government of India and its Sub-ordinate Office viz. NSS Regional Centres and by the concerned State Governments, Youth Welfare Department ஆல் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
	(iii)	நாட்டு நலப் பணிதிட்டத்தில் 2 ஆண்டுகள் முடித்தவர்கள்/ நாட்டு நலப் பணிதிட்டத்தில் பங்குபெற்று, அரசு ஆணை நிலை எண் 8, தேதி 21.01.2002-ல் உள்ள விதிமுறைகளை நிறைவு செய்தவர்கள் / மாநிலத்தில் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் பங்குகொண்டமைக்கான சான்றிதழ் பெற்றவர்கள்- **½ மதிப்பெண்**.
விளையாட்டுகள் / தடகளப் போட்டிகள் **(Sports / Games)** (உயர்அளவு மதிப்பெண்கள் - 2) (தமிழ்நாடு சார்பாக கலந்து கொண்டு பெற்றற விளையாட்டுப் படிவம் -I அல்லது II. தமிழ்நாடு பல்கலைக் கழக சார்பாக கலந்துகொண்டு பெற்ற விளையாட்டுப் படிவம்.III)	(i)	பள்ளியின் சார்பாக பள்ளிகளுக்கிடையேயான கல்வி மாவட்டங்கள் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் - **1/2 மதிப்பெண்**
	(ii)	கல்லூரியின் சார்பாக கல்லூரிகளுக்கிடையேயான மண்டலப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் (Inter Collegiate) - **1/2 மதிப்பெண்**
	(iii)	பல்கலைக்கழகங்களின் சார்பாக பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அதாவது படிவம் III - **1 மதிப்பெண்**
	(iv)	மாவட்டங்கள் சார்பாக மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் - **1 மதிப்பெண்**
	(v)	மாநிலத்தின் சார்பாக மாநிலங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அதாவது படிவம் II – **1 ½ மதிப்பெண்கள்**
	(vi)	தேசத்தின் சார்பாக பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அதாவது படிவம் I - **2 மதிப்பெண்கள்**

10% விளையாட்டு ஒதுக்கீட்டிற்கு வறையறுக்கப்பட்டுள்ள ஐந்தாண்டுகளுக்கு முன்பாக அதாவது 05.03.2014 க்கு முன்னர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு விளையாட்டுப் படிவம் I அல்லது II அல்லது III அல்லது பிற விளையாட்டுச் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்த விண்ணப்பதாரர்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் மட்டும் வழங்கப்படும்

விண்ணப்பதாரர்கள் வைத்திருக்கும் NCC/NSS/Sports /Games சான்றிதழ்களில், ஒவ்வொரு வகை சான்றிதழ்களில் உயரிய தகுதி கொண்ட ஒரே சான்றிதழுக்கு மட்டுமே உயர்அளவு மதிப்பெண் வழங்கப்படும். மேலே சொல்லப்பட்ட மூன்று வகைச் சான்றிதழ்களுக்கும் சேர்த்து வழங்கப்படும் மொத்த மதிப்பெண்கள் 5 மதிப்பெண்களுக்கு மிகாமல் இருக்கும்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

NCC/NSS/Sports / Games-ல் ஒரே மதிப்பெண் தகுதியில் ஒரு விண்ணப்பதாரர் இரண்டு சான்றிதழ்கள் பெற்றிருக்கும் பட்சத்தில் ஒரு சான்றிதழுக்கு மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்.

19. (a) இறுதி தற்காலிகத் தெரிவுப் பட்டியல் (Final Provisional Selection List)

i) எழுத்து தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் NCC, NSS, Sports/Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெறும் மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி மாவட்ட / மாநகர ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

ii) இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரே தகுதி மதிப்பெண் பெற்றிருந்தால், பிறந்த தேதியின் அடிப்படையில் வயதில் மூத்தவருக்கு இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது முன்னுரிமை அளிக்கப்படும்.

iii) இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது ஒரே தகுதி மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களுள் எவரொருவர் சாரணர் இயக்கத்தில் பங்கு பெற்று மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் சான்றிதழைப் பெற்றுள்ளாரோ அவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

iv) பத்தாம் வகுப்பினை தமிழ்பயிற்று மொழியில் பயின்றிருக்கும் விண்ணப்பதாரர்கள், இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது (Final Provisional Select List) 20% முன்னுரிமை அடிப்படையில் வகுப்பு வாரியாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

v) இறுதியாக தற்காலிகமாக தெரிவு செய்யப்படுபவர்களின் பட்டியல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணைய தளத்தில் (www.tnusrbonline.org) வெளியிடப்படும்.

(b) **மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணை**:

இரண்டாம் நிலை காவலர்கள் (மாவட்ட / மாநகர ஆயுதப்படை), இரண்டாம் நிலை காவலர் (தமிழ் நாடு சிறப்புக் காவல் படை) இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுபவர்கள், மருத்துவப் பரிசோதனைக்கும், முந்தைய பழக்க வழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த காவல் விசாரணைக்கும் காவல், சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலமாக உட்படுத்தப்படுவார்கள்.

20. விபத்து

பல்வேறு நிகழ்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல் பாகங்களில் பாதிப்பு மற்றும் காயங்களுக்கு அரசோ, காவல்துறையோ, தேர்வுக் குழுமமோ பொறுப்பேற்காது.

21. தேர்வுக் கட்டணம் : ரூ.130/.

தேர்வுக் கட்டணத்தை இணைய வழி செலுத்துதல் (online payment) முறையில், வலை வங்கி (Net banking)/ கடன் அட்டை (Credit Card)/ மற்றும் பற்று அட்டை (Debit Card) SBI (State Bank of India) மூலம் செலுத்தலாம். இணையவழியில்லாமல் SBI e-challan மூலமாகவும் SBI-யில் கட்டணம் செலுத்தலாம். தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறையில் வரைவுக் காசோலை, அஞ்சல் காசோலை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் அம்முறையில் பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

a) **செலுத்துச்சீட்டு (Challan) வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துதல் :**

i) விண்ணப்பதாரர் தேர்வுக் கட்டணத்தை செலுத்துவதற்கு "பணம் அல்லது SBI கிளை மூலம் பணம் செலுத்துதல்" (Payment through Cash or SBI Branch) எனும் விருப்பினைத் தேர்வு செய்தால், மற்ற விருப்புகளான வலைவங்கி (Net banking) /கடன் அட்டை (Credit Card)/ பற்று அட்டை (Debit Card) வாயிலாக தேர்வுக் கட்டணத்தை செலுத்த இயலாது.

ii) விண்ணப்பதாரர் "பணம் அல்லது SBI கிளை மூலம் பணம் செலுத்துதல்" எனும் விருப்பினைத் தேர்வு செய்தால், செலுத்துச் சீட்டு (Challan) ஒன்று உருவாகும் அதன் விவரம் விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். .

iii) SBI e-வலைவாசல் (SBI e-portal) வழியாக உருவாக்கப்படும் செலுத்துச்சீட்டானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள 6 நாட்கள் வரை பயன்பாட்டில் இருக்கும்.

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

iv) எந்தவொரு SBI வங்கியின் கிளையிலும் அவ்வங்கியின் பணம் பரிவர்த்தனை (Transaction) நேரங்களில் மட்டும் செலுத்துச்சீட்டு மூலம் தேர்வுக்கட்டணம் செலுத்தலாம். ஒவ்வொரு வங்கியின் பணம் பரிவர்த்தனை நேரங்கள் மாறுபடக்கூடும்.

v) செலுத்துச்சீட்டு மூலம் 6 நாட்களுக்குள் தேர்வுக் கட்டணத்தை செலுத்தாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் தகுதியற்றதாக ஆகிவிடும். இதன்பின்னர், விண்ணப்பதாரர்கள் மீண்டும் ஒரு மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைப் பதிவு செய்து புதிதாக விண்ணப்பம் சமர்ப்பிக்க நேரிடும்.

b) **இணையவழி வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துதல்:**

i) விண்ணப்பதாரர் இணையவழி வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துவற்கு வலைவங்கி (Net banking) / கடன் அட்டை (Credit card)/ பற்று அட்டை (Debit card) விருப்பினைத் தேர்வு செய்து தேர்வுக் கட்டணத்தை செலுத்த முற்படுகையில் ஏதேனும் தடங்கல் அல்லது துண்டிப்பு அல்லது தேர்வுக் கட்டணம் செலுத்துவது யாதொரு காரணம் தெரியாமல் ஏற்றுக்கொள்ளப்படாமலிருக்கும் நிலை ஏற்பட்டால் அதன்பின்னர், 30 நிமிடங்கள் கழித்து விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டணம் செலுத்தலாம்.

ii) விண்ணப்பதாரர் செலுத்திய தேர்வுக் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், தேர்வுக் கட்டணம் செலுத்திய விவரம் விண்ணப்பதாரரின் கட்டுப்பாட்டகத்தில் (Dashboard) 24 மணி நேரத்திற்குள் தெரிந்துவிடும்.

iii) விண்ணப்பதாரர் இணையவழி வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்த இயலாத நிலை ஏற்படின் அவர் செலுத்துச்சீட்டு வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறையினை தேர்வு செய்யலாம்.

iv) விண்ணப்பதாரர் கடைசி நிமிடத்தில் திரளான வாடிக்கையாளர்கள் கூட்டத்துடன் தேர்வுக் கட்டணம் செலுத்துவதையும், செலுத்துவதைத் தவிர்க்காமலிருக்கவும், ஒரே நேரத்தில் கூட்டமாக செலுத்துவதால் இணையவழி இடர்பாட்டைத் தவிர்க்கவும், தேர்வுக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தி விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

c) **தேர்வுக் கட்டணம் செலுத்தியதை உறுதி செய்தல் :**

i) விண்ணப்பதாரரது கட்டுப்பாட்டகத்தில் தேர்வுக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது வராத நிலையில், அவரது வங்கி கணக்கிலிருந்து பணம் வரவு வைக்கப்பட்டது அல்லது அவரது தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது அல்லது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் அர்த்தம் கொள்ள இயலாது என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ii) விண்ணப்பதாரரின் விண்ணப்பம் மற்றும் அவர் செலுத்திய தேர்வுக் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் விண்ணப்பதாரர் பதிவு செய்துள்ள தொலைபேசி எண்ணிற்கும் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கும் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட செய்தி அனுப்பப்படும்.

பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய சான்றிதழ்கள்

இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பொழுது, விண்ணப்பதாரருடைய தகுதிகளை நிரூபிப்பதற்கு தேவையான சான்றிதழ்களை தெளிவாக மின்பனுவல் (scan) செய்து பதிவேற்றம் செய்யவும்.

(பொருந்துவன மட்டும்)

1. விண்ணப்பதாரர் தனது பெயரை பத்தாம் வகுப்பு கல்வித் தகுதிக்குப் பின்னர் மாற்றம் செய்து அவ்விவரத்தினை அரசிதழில் (Government Gazette) வெளியிட்டிருந்தால் அரசிதழின் முதல் பக்கம் மற்றும் பெயர் மாற்றம் செய்த விவரம் வெளியிடப்பட்ட பக்கத்தின் நகல்கள்.
2. பிறந்த தேதிக்கான சான்று (பத்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ்).
3. கல்வித் தகுதிக்கான சான்று - 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்.
4. தமிழில் போதிய கல்வி கற்றதற்கான சான்றிதழ்.
5. சாதிச் சான்றிதழ் (தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வாழ்நாள் முழுவதற்கும் உரிய சான்றிதழ்).
6. ஆதரவற்ற விதவைக்கான சான்று
   (வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து வரையறுக்கப்பட்ட படிவத்தில் பெறப்பட்டச் சான்று).
7. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான சான்றிதழ்.
8. தேசிய மாணவர் படை (N.C.C) சான்றிதழ்.
9. நாட்டு நலப் பணித்திட்டம் (N.S.S) சான்றிதழ்.
10. சிறப்பு மதிப்பெண்கள் பெறுவதற்கான விளையாட்டு சான்றிதழ்.
11. விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் அதற்கான சான்றிதழ் - படிவம் I

athiyamanteam.com Video Coaching For PC, SI Police Exams Call : 8681859181

12. விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் அதற்கான சான்றிதழ் - படிவம் II
13. விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் அதற்கான சான்றிதழ் - படிவம் III
14. மேதகு இந்தியக் குடியரசு தலைவரிடமிருந்து பெற்ற சாரணர் (scout) சான்றிதழ்
15. தமிழ்பயிற்று மொழியில் கற்றதற்கான சான்றிதழ் (தமிழ்பயிற்று மொழி குறிப்பிடப்பட்ட பத்தாம் வகுப்பு பள்ளி மாற்றுச் சான்றிதழ்/ பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அல்லது கல்வி நிலையத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்).
16. பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியினை தனித்தேர்வர் (Private) வழியில் பயின்று தேர்ச்சி பெற்றிருந்தால் அவர் தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழை மாநில பள்ளித் தேர்வுகள் குழுமம் (இடைநிலை), அரசு தேர்வுகள் துறை, தமிழ்நாடு, சென்னை-6 (State Board of School Examinations (Secondary), Department of Government of Examinations, Tamil Nadu, Chennai-6), அலுவலகத்திலிருந்து பெற்று பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
17. தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்திலிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை.
